அ.வ.எண்.80/2017 நாள்: 23.03.2026

பி.சா.2 திருமதி.புஷ்பம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சொத்தின் பட்டா எண், சர்வே எண் தெரியுமா என்றால் பட்டா எண் தெரியாது சர்வே எண்.155/11 ஆகும். வழக்கு சொத்திலுள்ள வீட்டின் கதவு எண் என்ன என்றால் தெரியாது. கற்பகம்–கோதண்டபாணியை தெரியுமா என்றல் தெரியும். மேற்படி கற்பகம்–கோதண்டபாணி பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல, கோதண்டபாணியின் அப்பா செவிடாயாச்சான் பெயரில் உள்ளது. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ரகுமான் குடியிருக்கும் வீட்டில்தான் நாங்களும் குடியிருந்து வருகிறோம். ஓட்டுவீட்டில் யார் குடியிருக்கிறார் என்றால் எனது மகன் ராபின்சன் (2ஆம் பிரதிவாதி) குடியிருக்கிறார். எனது மற்றொரு மகன் அலெக்ஸாண்டர் எங்கு குடியிருக்கிறார் என்றால் அவர் எங்கு குடியிருக்கிறார் என்று தெரியாது.

2) வழக்கு சொத்தை எனது மகன் அலெக்ஸாண்டர் திருமணத்தின்போது புழங்கிக்கொள்ள வாதிக் கொடுத்தநிலையில் மீண்டும் வாதியிடம் வழக்கு சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்று எனது மகன் அலெக்ஸாண்டர் கூறினார் என்றால் சரியல்ல. அவ்வாறு அலெக்ஸாண்டர் சொன்னதால் 1, 2 பிரதிவாதிகளுக்கும், அலெக்ஸாண்டருக்கும் சண்டை நடந்தது என்றால் சரியல்ல. வாதிக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் சண்டை நடந்ததா என்றால் இல்லை. வாதிக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் சண்டை நடந்து வாதி திருக்காட்டுப்பள்ளி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். விசாரணைக்கு நான் சென்றேனா என்றால் ஆமாம். நான் வழக்கு சொத்தில் 45 வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, கோதண்டபாணி எனக்கு ஆவணம் எழுதித்தரவில்லை.

3) நான் எவ்வளவு ரூபாய் பணம் கொடுத்தேன் என்று எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு கூறாமல் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை சுற்றிலும் அடைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் ஆமாம், அதற்குள் கூரைவீடு உள்ளது. அந்த

கூரைவீடு வாதியினுடையது என்றால் சரியல்ல, 1 ஆம் பிரதிவாதி குடியிருந்தார். அதில் நான் குடியிருந்து வருகிறேன். கோதண்டபானி வாதியிடம் வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்தவிவரம் 2 மாதங்கள் கழித்துதான் தெரியவந்தது. அவ்வாறு தெரிந்த பிறகு காவல் நிலையத்தில் மோசடி புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, வாதிதான் என்மீது புகார் கொடுத்தார்.

4) நான் கோதண்டபானி மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிக்கு சரியாக பேசவராது திக்கிதிக்கி பேசுவார் என்றால் சரிதான், தற்போது நன்றாக பேசுவார். வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று எனது மருமகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/Pushpam

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.23 19:30:37 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU